# கருப்பு வெள்ளை
Karuppu Vellai

மறைக்கப்பட்ட உண்மைகளின் உரிமைக் குரல்..!

கருப்பு : 01 | 2021 ஜூலை - 30 | வெள்ளை : 05


# பொருட்களை வழங்கி ஏமாற்றி அரசியல் செய்யும் கலாசாரத்தை இல்லாது ஒழிப்பதே எனது இலக்கு!

## கற்பிட்டி தூய தேசம் அமைப்பினருடனான சந்திப்பில் பாராளுமன்ற உறுப்பினர் ஹெக்டர் அப்புஹாமி

(எமது விஷேட செய்தியாளர்)

கற்பிட்டியின் தூய தேசம் (Clean Nation) அமைப்பின் உயர்பீட உறுப்பினர்களுடனான விஷேட சந்திப்பொன்றை ஐக்கிய மக்கள் சக்தியின் புத்தளம் மாவட்ட அமைப்பாளரும், பாராளுமன்ற உறுப்பினரு மான ஹெக்டர் அப்புஹாமி உடன் கடந்த 2021.07.26 ம் திகதி இரவு தூய தேசம் அமைப்பின் தலைவரின் இல்லத்தில் நடைபெற்றது.

இதன்போது கற்பிட்டி பிரதேசத்தில் காணப்படும் குறைபாடுகள், தேவைப்பாடுகள் மற்றும் மேற்கொள்ளப் பட வேண்டிய அபிவிருத்தித் திட்டங்கள் என்பன பற்றி யும் விரிவாக கலந்துரையாடப்பட்டது. இதில் ஐக்கிய மக்கள் சக்தியின் கற்பிட்டி அமைப்பாளர் எம்.எப்.எம். றில்மியாஸ் வும் கலந்து கொண்டார்.

இதன்போது கருத்து தெரிவித்த ஐக்கிய மக்கள் சக்தியின் புத்தளம் மாவட்ட அமைப்பாளரும் பாராளு மன்ற உறுப்பினருமான ஹெக்டர் அப்புஹாமி :

புத்தளம் மாவட்டத்தை சர்வதேச தரத்திலான முஸ்லிம் சுற்றுலாத்துறைத் தளமாக உருவாக்கப்படுவ தின் அவசியத்தையும் அதன் மூலம் முஸ்லிம்களின் கலாச்சாரத்திற்கு பாதிப்பு ஏற்படாத வண்ணம் புத்தளம் மாவட்டத்தில் முஸ்லிம் சுற்றுலாத்துறையை அபிவிருத் தி அடையச் செய்வதுடன், கற்பிட்டி பிரதேசத்தின் அடிப் படை அபிவிருத்தி திட்டங்களான பாதை, மின்சாரம், குழாய்நீர் திட்டம் என்பனவற்றையும் எதிர்காலத்தில் முன்னெடுப்பதற்கான திட்டங்களும் உண்டு எனவும். இன்னும் தேர்தல் என்றவுடன் இளைஞர்களுக்கு விளை யாட்டு பொருட்கள் வழங்கி ஏமாற்றும் அரசியல் கலாசாரத்தை இல்லாதொழிப்பதே எனது பிரதான. இலக்கு எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இலங்கை பாராளுமன்றத்தில் ஒரு தீவிர பங் கேற்பாளராகவும் ஜனநாயக செயற்பாட்டில் உங்களி னால் வெளியீடப்படும் ஆக்கபூர்வமான கருத்துக்களை நாம் அவதானித்து எமது கற்பிட்டியின் தூய தேசம் அமைப்பின் மூலமாக ஐந்து கோரிக்கைகளை கொண்ட மகஜரை உங்களிடம் இன்று கையளிப்பதாகவும் இவை கள் உங்களின் குரலில் பாராளுமன்றத்தில் ஒலிக்க வேண்டும் என்று எதிர்பார்ப்பதாகவும் கற்பிட்டியின் தூய தேசம் அமைப்பின் தலைவர் எம்.பீ.எம் அசாம் தெரிவித் தார்.

( இந்நிகழ்வின் புகைப்படங்கள் 06 ம் பக்கத்தில்)




# கருப்பு வெள்ளை Karuppu Vellai

மறைக்கப்பட்ட உண்மைகளின் உரிமைக் குரல்..!

கருப்பு: 01 2021 ஜூலை –30 வெள்ளை: 05


## அன்பார்ந்த வாசகர்களுக்கு...

## அஸ்ஸலாமு அலைக்கும் வணக்கம்....

**எல்லாப் புகழும் இறைவனுக்கே.. இறைவனின் பெரும் அருளால் ஐந்தாவது 'கருப்பு வெள்ளை' பத்திரிகையின் மின்னிதழ் வாயிலாக மீண்டும் என்னை உங்கள் முன் கொண்டு வந்த வல்ல இறைவனுக்கே எல்லாப் புகழும் 'அல்ஹம்துலில்லாஹ்'**

## அறிவியல் நூற்றாண்டு

**நாம் வாழும் இந்த நூற்றாண்டை அறிவியல் நூற்றாண்டு என அழைக்கின்றனர். அறிஞர் பெருமக்கள். எதையும் ஆராய்ந்து காரண காரியத்துடன் 'எப்படி' நடக்கிறது என்பதனை விளக்குகிறது அறிவியல். இப்படி விளக்க முடியாத எதையும் நம்ப முடியாது என்பது பகுத்தறிவுவாதிகளின் வாதம். ஆனால் அனைத்தையுமே அறிவுக்கு இசையும் வகையில் அறிவியலின் அடிப்படையில், விளக்கிவிட முடிகிறதா? முடியவில்லை! பேரண்டத்தில் சுற்றும் கிரகங்களையும், அதன் வெப்ப நிலைகளையும், தூரத்தையும், துல்லியமாகத் தரும் அறிவியல் அவை 'ஏன்' அப்படி சுழல்கின்றன ஏன் அவற்றின் தூரங்கள் அப்படி நிர்ணயிக்கப் பட்டுள்ளன என்பதை விளக்க முடியவில்லை!**

**HOW என்பதை விளக்கும் அறிவியல் WHY என்பதை விளக்கத் திணறுகிறது !**

**அறிவுக்கும் அப்பால் நடக்கும் விந்தைகள் ஆயிரம் ஆயிரம் !**

**"துன்பங்களைச் சகித்துக் கொள்ளும் பொறுமையாளர்களை அல்லாஹ் நேசிக்கின்றான்."**

**இன்ஷா அல்லாஹ் மீண்டும் ஆறாவது. இதழில் வந்து உங்களுடன் கலக்கும் வரை....**

எம்.எச்.எம் சியாஜ்
பிரதம ஆசிரியர்.

# இணைந்து விவேகத்துடன் பயணிப்பதுதான் சிறந்த வழி



**சிந்தனை** சுதந்திரம், மாற்றுச் சிந்தனை. ஜனநாயகம் என்பன கட்டாயம் தேவை. அதற்காக நாம்போராடவும் உழைக்கவும் வேண்டும்.அதில் எந்த தவறும் கிடையாது. ஆனால் நாட்டில் இதுவரை நடந்த விடயங்களை வைத்து பெரும்பான்மை சமூகத்தின் மத்தியில் முஸ்லிம்கள் பற்றிய தவறான கருத்த விதைக்கப்பட்டுவிட்டது.

**அதற்கு யார் காரணம்?**

என்ன காரணம்? என்பதை விடவும் அதற்கான திர்வு என்ன என்பதை பற்றியே நாம் அதிகம் சிந்திக்க வேண்டியுள்ளது. காரணம், எதிர்காலம் பாரிய சிக்கல்களை உள்ளடக்கியுள்ளது. என்பது சாதாரணமாக யாருக்கு விளங்குகிறது.

**முதலாவது :**

நாட்டில் பலமான ஒரு எதிர்க்கட்சி இருக்க வேண்டும். எனினும் தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ள மாற்றங்களை அவதானிக்கும் போது தெளிவான உண்மைதான் நாட்டில் பலமான எதிர்க்கட்சி இல்லை.

**இரண்டாவது :**

நாம் ஒரு சமூகம் என்ற வகையில் மார்க்கத் தலைமைகள் எம்மை வழிநடத்த வேண்டும். இது ஒரு நீண்டகால பிரச்சினை. வழிகாட்டும் அளவுக்கு மார்க்கத் தலைமைகள் தகுந்தவர்களாக இல்லை அல்லது சமூகம் அவர்களைப் பின்பற்றி செயற்படத்தயாராக. இல்லை.

**மூன்றாவது :**

அரசியல் தலைமைகள் சமூகத்தை சரியான பாதையில் அழைத்துச் செல்வதற்கு பதிலாக தத்தமது சுயநல அரசியல் இலாபங்களுக்காக பயன்படுத்துகிறார்கள். இது ஒரு தொடர்கதை

**நான்காவது :**

அறிவு, கொள்கை மற்றும் சிந்தனை சார்ந்த ஒரு சமுதாயப் பரம்பரை உருவாக்குவதற்கான இடைவெளி நீண்டு கொண்டே செல்கிறது.

**ஐந்தாவது :**

நிகழ்ந்த சாதகமான மற்றும் பாதகமான அரசியல் சந்தர்ப்ப சூழ்நிலைகள் காரணமாக பெரும்பான்மை சமூகம் இலக்கு ரீதியான பயணம் ஒன்றை ஆரம்பித்து. இருக்கிறார்கள் என்பது தெளிவாக விளங்குகிறது. நம்மையும் நம் சமூகத்தையும் நாமிருக்கும் வரைக்கும் பாதுகாக்க அவர்களுடன் இணைந்து விவேகத்துடன் பயணிப்பதைத் தவிர வேறு வழி இருக்கிறதா???

**எம். எச். எம் நிஸ்வி (நளிமி) (நன்றி-செரண்டிப் பேஜ்)**

# பெயர் பலகை இல்லாத ஊர்

## இது பற்றி சிந்திக்காத கற்பிட்டி பிரதேச சபையின் தலைவர் மற்றும் உறுப்பினர்களின் கவனத்திற்கு..!

(எம்.எச்.எம்.எஸ்)

**கற்பிட்டி** பிரதேச சபையில் பிரதான தலை நகராக காணப்படும் கற்பிட்டி நகர் நீண்ட நாட்களாக பெயர் பலகை இன்றி காணப்படுகின்றது.


கற்பிட்டி நகருக்கான கொங்ரீட் பெயர் பலகை ஆரம்ப காலத்தில் காணப்பட்டது. அது சேதமடைந்து நீண்ட நாட்களாக புணரமைக்கப்படாமல் காணப்பட்ட நிலையில் கற்பிட்டி பிரதேச சபையின் தலைவராக தாஹீர் பதவி வகித்த காலப்பகுதியில் புதியதோர் கொங்ரீடிலான பெயர் பலகை ஸ்தாபிக்கப்பட்டது. எனினும் அது ஸ்தாபிக்கப்பட்டு சில நாட்களில் இனம் தெரியாத நபர்களால் உடைக்கப்பட்டது.

அதன் பிறகு பல வருடங்கள் பெயர் பலகை. இன்றியே கற்பிட்டி நகர் காட்சி தந்தது. அதனை அடுத்து கற்பிட்டி முச்சக்கரவண்டி சங்கத்தின் முயற்சியினால் 2001 ம் ஆண்டு தகடினால் ஒரு பெயர் பலகை நாட்டப்பட்டது. அது சில வருடங்களில் சேதமடைந்த நிலையில் மீண்டும் அதே முச்சக்கரவண்டிகள் சங்கத்தின் மூலம் இன்னுமொரு தகட்டினாலான பெயர் பலகை 2010 ஆண்டிற்கு பிறகு நாட்டப்பட்டது.

இக்காலப் பகுதிகளில் மாறி மாறி கற்பிட்டி பிரதேச சபையின் தலைவர்களாகவும் உறுப்பினர்களாகவும் இருந்த எவரும் நிரந்தரமான ஒரு பெயர் பலகையை நிர்மாணிப்பதற்கான எவ்வித முயற்சிகளையும் மேற்கொள்ளவில்லை என்பது குறிப்பிடதக்கவிடயமாகும்

இவ்வாரான நிலையில் தற்போது முச்சக்கர வண்டிகள் சங்கத்தின் பெயர் பலகையும் உடைந்து விழுந்து பல மாதங்கள் கடந்த நிலையிலும் கற்பிட்டி நகரின் எல்லையில் நிரந்தர பெயர் பலகை ஒன்றை நிர்மாணிப்பதற்கான எவ்வித நடவடிக்கையும் கற்பிட்டி பிரதேச சபைத் தலைவர் மற்றும் உறுப்பினர்களால் மேற்கொள்ளப்படாமல் இருப்பது மிகவும் கவலை தருவதாக கற்பிட்டி வாழ் மக்கள் கருப்புவெள்ளை மின்னிதழுக்கு தெரிவித்தனர்.





(புகைப்பட உதவி - எஸ்.எச்.எம்.நவ்பர்)

# திறக்கப்பட்டது புதிய ஜனாதிபதி ஊடக மையம்






**புதிதாக** நிர்மாணிக்கப்பட்டுள்ள ஜனாதிபதி ஊடக மையம் ஜனாதிபதியின் தலைமை ஆலோசகர் லலித் வீரதுங்க தலைமையில் 29ம் திகதி திறந்து வைக்கப்பட்டது.

கொழும்பு - கோட்டை ஜனாதிபதி மாளிகைக்கு முன்னால் அமைந்துள்ள பழைய சார்டட் வங்கிக் கட்டிடத்தின் கீழ் மாடியில், இந்த ஊடக மையம் அமைக்கப்பட்டுள்ளது.

சுபீட்சத்தின் நோக்கு கொள்கை பிரகடனத்தின் ஊடாக மக்களுக்கு வழங்கப்பட்ட உறுதிமொழிகளை நனவாக்கும் நோக்கில் முன்னெடுக்கப்படும் வேலைத்திட்டங்களின் முன்னேற்றம் மற்றும் ஜனாதிபதியினதும் அவரது அலுவலகத்தினதும் தகவல்களை சரியாகவும், வினைத்திறனாகவும் ஊடகங்கள் மற்றும் பொதுமக்களுக்கு வழங்குவதே இந்த ஜனாதிபதி ஊடக மையத்தின் எதிர்பார்ப்பாகும்.

ஒரே தடவையில் 40 ஊடகவியலாளர்கள் அமரும் வகையிலும் அவர்களது தேவைகளை பூர்த்தி செய்யும் வகையிலான அனைத்து அம்சங்களுடனும் இந்த ஊடக மையம் அமையப்பெற்றுள்ளது.

# ஓகஸ்ட் 01 முதல் பொலித்தீன் பாவனைக்கு தடை மீறினால் அபராதம்



**ஓகஸ்ட்** முதலாம் திகதி முதல் லஞ்ச்ஷீட் மற்றும் பொலித்தீன்களை உற்பத்தி செய்வதற்கும், விநியோகிப்பதற்கும் விற்பனை செய்வதற்கும் தடை விதிக்கப்படுவதுடன் அதனை மீறுபவர்களுக்கு ஒரு இலட்சம் ரூபா அபராதம் விதிக்கப்படும் என சுற்றாடல் அமைச்சு வெளியிட்டஅறிக்கையில் தெரிவிக்கப்படுகிறது.

எனினும் தற்போது உற்பத்தி செய்திருக்கும் தொகையியை விற்பனை செய்வதற்காக ஒருமாத நிவாரண காலம் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும். இதன்பின்னர் சுற்றாடலுக்கு தீங்கு விளைவிக்காத மக்கும் லஞ்ச்ஷீட் மாத்திரம் உற்பத்தி செய்யப்பட்டு பாவனைக்காக விற்பனைக்கு விடப்படும்.







# பெற்றோர்களே...!

# உங்கள் பெண் பிள்ளை தொடர்பாக ஒரு நிமிடம்

## *13 வயது சிறுமி பாலியல் தொழிலில் ஈடுபடுத்தப்பட்டு பலர் உழைப்பு.., 10 வயது சிறுமி பாலியல் துஷ்பிரயோகம்.., 15 வயது சிறுமி தாயின் பொறுப்பற்ற செயற்பாட்டால் பலாத்கார திருமணம்... இவ்வாறு பெண் பிள்ளைகள் தொடர்பான அவலம் தொடர்கிறது...*

**இந்த** செய்திகள் எல்லாம் மனதில் பெரும் கவலையை உண்டாக்கிறது அதனால் இந்த செய்தியை உங்களுக்குச் சொல்ல விரும்புகிறேன். நாம் கடைபிடிக்கும் திருமண சம்பிரதாயம் உண்டல்லவா அது முதலில் மாற்றப்பட வேண்டும். அந்த மாற்றம் ஒவ்வொரு வீட்டிலிருந்தும் ஆரம்பிக்கப்பட வேண்டும்.

**இது தொடர்பாக பெற்றோருடன் ஒரு சில வார்த்தைகள்....**

நீங்கள் பணத்தால், அந்தஸ்த்தால், அனுபவத்தால் பெரிய ஆட்களாக. இருக்கலாம். எங்களுக்கு உபதேசம் செய்ய இவன் யார் என்று நினைக்கவேண்டாம். உண்மையில் இது உபதேசம் அல்ல, இது எனது ஒரு விருப்பம்...

நமது வீடுகளிலே பெண் பிள்ளைகள் தொடர்பாக எமது பேச்சு எவ்வாறு உள்ளது. எப்படியாவது உன்னை திருமணம் முடித்துக் கொடுத்துவிடவேண்டும். உன்னை கட்டிக்கொடுத்தால் தான் எனக்கு நிம்மதி. உன்னை எப்போது தலை மூழ்கினேனோ அன்றுதான் நான் மகிழ்ச்சி, என்று பெண் பிள்ளைகள் தொடர்பாக நாம் பேசும் பேச்சு முதலில் நிறுத்தப்படவேண்டும்.

முடித்துவிடவேண்டும், கொடுத்துவிடவேண்டும், தலைமூழ்கிடவேண்டும், என்று நாம் பேசும் இந்தப் பெண் பிள்ளைகள் யார்? அவர்கள் ஏதாவது மிருகங்களா? அல்லது தரமில்லாத பொருட்களா? ஆரம்பமாக வளர்ந்து வரும் பெண் பிள்ளைகள் பெற்றோர்களே நீங்கள் பிள்ளைகளிடம் இவ்வாறு பேசுவதை நிறுத்தவேண்டும்.

**அதேவேளை உங்களது ஆண் பிள்ளைகளை இவ்வாறு பேசுவோமா..?**

என் மகனுக்கு எப்படியாவது நல்ல பெண்ணை தேடிக்கொடுக்க வேண்டும் தேடிக் கொண்டுவர வேண்டும் என்று இங்கு கொடுக்கலும், இன்னுமொன்று வாங்கலுமாகும் என்று. இந்த முறைமை மாற்றப்பட வேண்டும்.

ஒன்றை நாம் ஆழமாக உள்ளத்தில் பதியவைக்க வேண்டும். அதுதான் மனிதப்பிறவிகளின் வாழ்வு என்பது வியாபரமல்ல அது மிகப் பெறுமதியான ஒரு விடயம். இல்லாமற்போனால் பெண்கள் தொடர்பான துஸ்பிரயோகம், தற்கொலை, பெண்களுக்கு எதிரான வன்முறைகள் தொடரும் ஒரு ஆபத்தான சூழல் வளரும்.

**இனி அடுத்தது...**

பெண் பிள்ளைகளை நன்றாகப்படிக்கவைத்து அவர்களை சொந்தக்காலில் நிற்கும் அளவுக்கு நாம் உருவாக்குவது பெற்றோர்கள் செய்யவேண்டிய மிகப் பெரும் சேவையாகும். அந்த உருவாக்கத்தால் அவர்களும், குடும்பமும், சமூகமும், நாடும் தேவைப்பட்டால் உலகமும் பயன்பெறும்.

**பெற்றோர்களே..!**

மகளை திருமணப்பந்தலுக்கு அழைத்துச்செல்வது, அவளை மருமகனிடம் அழகாக ஒப்படைப்பது, குழந்தைகளை கொஞ்சுவது போன்ற வழமையான கனவுகளேடு, அவள் சொந்தக்காலில் நின்று உழைப்பது, அவள் சமூக உருவாக்கத்தில் ஈடுபடுவது, போன்ற கனவுகளையும் காணத்தவறிவிடாதீர்கள். அதைக் காண்பதற்குப் படியுங்கள்.

நீ அடங்கி, ஒடுங்கி இருக்கப் பழகு, நீ படித்து பெரும் பட்டம் எடுத்து என்னதான் செய்யப்போகிறாய்? உனது எதிர்காலத்தை உன் கணவரல்லவா தீர்மானிப்பார் போன்ற தன் நம்பிக்கையை தகர்க்கும் வசனங்களை அவர்களோடு எப்போதும் பேசாதீர்கள்.

**ஒரு பிரதான விடயம்...**

ஈமானுடன் மற்றவர்களுக்கு பயனளிக்கும் ஒரு பெண் குழந்தையை

➡ தொடர்ச்சி 05 ம் பக்கத்தில்





# கற்பிட்டி அல்–அக்ஸா தேசிய பாடசாலையின் இன்றைய நிலை




**கடந்த மூன்றாவது இதழின் தொடர்ச்சி....**

**தேசிய** பாடசாலையின் நிர்வாக கட்டமைப்பின் படி **SLEAS** அல்லது **SLPS GR 01** தகைமை பெற்றவர் அதிபராக நியமனம் பெற வேண்டும். அதன் கீழ் வரக்கூடிய பிரதி, உதவி அதிபர்கள் யாவரும் **SLPS** தகைமை உடையவராக இருப்பது தேசிய பாடசாலைகளுக்குரிய சிறப்பம்சமாகும். இக்கட்டமைப்பு கற்பிட்டி அல் அக்ஸா தேசிய பாடசாலைக்கு விதிவிலக்காக உள்ளதா? தேசிய பாடசாலைகளுக்கான அதிபர் நியமனங்கள் பொதுச் சேவை ஆணைக்குழுவினால் வழங்கப்பட்டு வருகின்றது. அதன் அடிப்படையில் அல் அக்ஸா தேசிய பாடசாலை தரம் உயர்த்தப்பட்டதிலிருந்து முதலாவது நியமனம் பெற்ற **SLPS** அதிபர் என்ற பெருமை மொஹமட் நவ்ஷாத் அவரையேசாரும்.

மூன்று தசாப்தங்களுக்கு முன்னர் முன்னால் ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாச அவர்களால் வழங்கப்பட்ட பயிலுனர் ஆசிரியர் நியமனத்தின் போது ஏறக்குறைய 22 ஆசிரியர்கள் இப்பாடசாலையிலேயே பயிற்சி பெற்றனர். இதில் சிலர் இப்பாடசாலையிலேயே இன்னும் ஆசிரியர் பணியைத் தொடர்ந்து கொண்டிருப்பதுடன் இன்னும் சிலர் இப்பாடசாலையிலிருந்தே ஓய்வு பெற்றுச் சென்றுள்ளனர். இதில் சிறப்பம்சம் என்னவென்றால் இவர்கள் அணைவரும் இப்பாடசாலையிலேயே கல்வி கற்றவர்கள் என்பதாகும்.

பல தசாப்தங்களாக காணப்படும் சிக்கல்களில் ஒன்றான ஆசிரியர் இடமாற்றம் தொடர்பாக முன்வைக்கப்பட்ட கருத்துக்களில் தேசிய. பாடசாலைகளுக்குடையிலேயே இடமாற்றம் இடம்பெற வேண்டியிருப்பதனால் கற்பிட்டி கோட்டத்திற்குள் வேறு தேசிய பாடசாலைகள் இல்லாமை என்ற காரணங்கள் மற்றும் தேசிய பாட-சாலைகளக்கிடையிலான தூரம் என்ற காரணங்கள் பிரதான காரணிகளாக கூறப்பட்டு வந்தது.

தற்சமயம் கோட்டமட்டத்தில் புதிதாக மூன்று பாடசாலைகள் தேசிய பாடசாலைகளாக தரம் உயர்த்தப்பட்டுள்ளது. அதில் கற்பிட்டி நகரில் உள்ள சிங்கள மொழி பாடசாலையான நிர்மல மாதா, தமிழ் மொழி பாடசாலையான நுரைச்சோலை முஸ்லிம் பாடசாலை மற்றும் இரு மொழி பாடசாலையான மாம்புரி வித்தியாலயம் ஆகியவைகளாகும்.

இத் தரம் உயர்வினால் தனிகாட்டு ராஜாவாக காணப்பட்ட கற்பிட்டி அல் அக்ஸா தேசிய பாடசாலையில் இதுவரை காலமும் கேள்விக்குறியாக காணப்பட்டு வந்த அனைத்து குறைகளும் (ஆசிரியர் பற்றாக்குறை, ஆசிரியர் இடமாற்றம், தகுதியான அதிபர் நியமனங்கள்) நிவர்த்தி செய்யப்படுமா...???

எந்த நிர்வாகம் ஆயினும் **“ Right Men For The Right Job ”** என்ற வாசகத்திற்கு அமைய இடம் பெற்றால் அதன் வளர்ச்சி சிறப்புற அமைவதில் எவ்வித ஐயமுமில்லை.!

**(முற்றும்)**

**இவரின் மற்றுமோர் புதிய தொடர் விரைவில்**

**எம்.எஸ் – கற்பிட்டி.**

## பெற்றோர்களே..!

04 ம் பக்க தொடர்....

உருவாக்கினாலும் அதனூடாக சுவனம் செல்லலாம் என்ற நபிகளாரின் வாக்கை உண்மைப்படுத்துங்கள்.

**ஒன்றை மறந்துவிட வேண்டாம்...**

கணவருடைய வீட்டில் உங்கள் மகள் கணவரால் அல்லது அவரது பெற்றோரால் துன்புறுத்தப்படுகிறாள் என்றால் அவளைப் பாதுகாப்பது உங்கள் பொறுப்பாகும். அடிப்படச் செய்தால் ஊர் என்ன சொல்லும், உலகம் என்ன சொல்லும் என்று நினைப்பதுதான் நீங்கள் முதலில் மாற்ற வேண்டிய விடயமாகும்.

ஏனென்றால் உங்கள் மகள் துஷ்பிரயோகத்திற்கு ஆளானால் அல்லது கொ-பட்டால் அல்லது தற்கொலை செய்து கொண்டால் வேதனையும், வலியும் பெற்றோகளாகிய உங்களுக்கே வந்து சேரும் என்பதை மறக்காதீர்கள்.

**“ பெண் பிள்ளைகள் சாபமல்ல அது ஒரு வரமாகும்”**

**M.N.N.M Rameez**
**Psychological Counselor**
**Happy Life Line**







# கற்பிட்டி தூய தேசம் அமைப்பினால் பாராளுமன்ற உறுப்பினர் ஹெக்டர் அப்புஹாமிக்கு வழங்கப்பட்ட ஐந்து முன்மொழிவுகள்!

முதலாவது :
புத்தளத்தில் கல்வி மறுமலர்ச்சியை ஏற்படுத்திய மர்ஹூம் கே.ஏ பாயிஸ் அவர்களின் மறைவு தினமாகிய மே - 23 ம் திகதியை " புத்தளம் மாவட்டத்திற்கான கல்வி மேம்பாட்டு நாள்" என்ற பிரகடனத்தை ஏற்படுத்துவதற்கான முன்மொழிவு.

இரண்டாவது :
கற்பிட்டிக்கு முதன்முதலில் ஒலி தந்த மின்சார நிலைய கட்டடிடம் தற்போது உடைக்கப்பட்டுள்ளது. பிரதேச சபைக்கு சொந்தமான இவ்விடத்தில் கற்பிட்டியில் இருந்து கொண்டு செல்லப்பட்ட மின்சார நிலைய காரியாலயத்திற்கு பதில் உப மின்சார காரியாலயம் அமைக்கப்படுவதற்கான முன்மொழிவு.

மூன்றாவது :
நீண்ட நாட்களாக எமது கற்பிட்டி இளைஞர்கள் பொது விளையாட்டு மைதானம் இன்றி பல்வேறு சிரமங்களுக்கு முகம்கொடுத்து வருகின்றனர். சுமார் ஒரு தசாப்த காலமாக கற்பிட்டி புதுக்குடியிருப்பில் பொது விளையாட்டு மைதானம் என்ற பெயரில் வாய்க்கால் ஓடையின் ஒரு பகுதியை பல்வேறு பொருட்களால் மூடுவதற்கு முயற்சித்தும் இன்னும் அது முற்றுப்பெறாமலேயே காணப்படுவதனையும் சுட்டிக்காட்டுவதுடன் கற்பிட்டிக்கான பொது விளையாட்டு மைதானத்தின் அவசர தேவை குறித்தும் முன்மொழிவு.

நான்காவது :
கற்பிட்டியின் பொருளாதாரத்தில் எவ்வித வருமானத்தையும் கற்பிட்டிக்கு பெற்றுக் கொடுக்காமல் கற்பிட்டி. இறங்குதுறை என்ற பெயரில் கற்பிட்டி மக்களிடம் பெறப்படும் கட்டணங்கள் கூட வென்னப்புவைக்கு செல்லும் வகையில் கற்பிட்டி பிரதேச சபையினால் குத்தகைக்கு கொடுக்கப்பட்டுள்ள கற்பிட்டி இறங்கு துறை பற்றிய முன்மொழிவு.

ஐந்தாவது :
கற்பிட்டியின் சிறு கடற்பரப்பை ஒட்டியதாக கரையோரமாக காணப்படும் கண்டல் வளம் பாதுகாக்கப்பட வேண்டும். அதன் அடிப்படையில் கண்டல் பாதுகாப்பு வலயம் ஒன்று உருவாக்கப்பட வேண்டும் என்ற முன்மொழிவு.











(புகைப்பட உதவி - எம்.ஆர்.எம் றஸான்)






# படத்தைப் பார் இடத்தைச் சொல் இல-01

அருகில் உள்ள படம் எங்கு எடுக்கப்பட்டது என்ற சரியான விடையினை SMS ஊடாக எதிர்வரும் 2021 அகஸ்ட் 10 ம் திகதிக்கு முன் அனுப்பிவையுங்கள்

01. சரியான விடை 02. உங்களின் பெயர் 03. முகவரி என்பவற்றை குறிப்பிட மறவாதீர்கள். அதிஷ்டசாலிகள் இருவருக்கு 200/- ரீலோட் பரிசாக வழங்கப்படும்.

SMS அனுப்ப வேண்டிய தொலைபேசி இல 078 340 20 29

அனுசரணை :










# நீத்தார் பெருமை



**03 இவ்வாரம்**

**நினைவு கூறப்படக் கூடியவர்கள் எத்துறையினை சார்ந்தவராகவும் இருக்கலாம்**



**மர்ஹூம் அல்ஹாஜ் அஷ்ஷேய்ஹ் சீ.எஸ்.எம் செய்னுல் ஆப்தீன் (பாகவி)**

கற்பிட்டியில் வாழ்ந்து மறைந்தும் மக்கள் மனங்களில் என்றும் நினைவில் நின்றுகொண்டிருக்கும் மாமனிதர்களின் நினைவலைகளை மீட்டிப் பார்க்கும் களம் இது. இதில் நினைவு கூறுவதற்கு பொறுத்தமானவர்கள் என நீங்கள் என்னும் கற்பிட்டியில் வாழ்ந்து மறைந்த மனிதர்கள் பற்றிய சிறு குறிப்பையும் அவரின் புகைப்படம் ஒன்றையும் உடன் எமது வட்சப் இலக்கமான **077 47 48 407** ற்கு உடன் அனுப்பிவைக்கவும்.

**இவ்வாரம்** கற்பிட்டியில் வாழ்ந்து மறைந்த **கற்பிட்டி ஹஸ்ரத்** என்றழைக்கப்படும். **மர்ஹூம் அல்ஹாஜ் அஷ்ஷேய்ஹ் சீ.எஸ்.எம். செய்னுல் ஆப்தீன் (பாகவி)** பற்றிய நினைவலைகளை மீட்டிப் பார்க்கும் சந்தர்ப்பத்தினை **வாராந்த மின்னிதழ்'** பத்திரிகையான " **கருப்புவெள்ளை"** வாசகர்களுக்கு வழங்கியுள்ளது.

அதன் அடிப்படையில் **மர்ஹூம் அல்ஹாஜ் அஷ்ஷேய்ஹ் சீ.எஸ்.எம். செய்னுல் ஆப்தீன் (பாகவி)** பற்றிய புகைப்படங்கள், கவிதைகள், கட்டுரைகள், விவரணங்கள் என உங்களிடம் புரையோடிக் கிடக்கும் தகவல்களை எமது வட்சப் இலக்கமான 077 47 48 407 ற்கு உடன் அனுப்பிவையுங்கள்.

அவைகள் ஆவணங்களாக தொகுத்து வெளியிடுதற்கான ஏற்பாடுகள் " **கருப்புவெள்ளை"** ' **மின்னிதழ்'** இன் **எம்.எஸ் மீடியா நெட்வேர்க்** மேற்கொள்ளும்.

# கற்பிட்டி பிரதேச செயலகப் பிரிவில் ஆரம்பிக்கப்பட்ட சௌபாக்கிய்யா உற்பத்தி கிராம வேலைத்திட்டம்



(எம்.எச்.எம்.எஸ்)

**சுபீட்சமான** (சௌபாக்கியா) உற்பத்தி கிராமங்கள் வேலைத்திட்டத்தின் ஊடாக கற்பிட்டி பிரதேச செயலகப் பிரிவில் நான்கு கிராமங்களை உருவாக்குவதற்கு திட்டமிடப்பட்டு அதன் வேலைத்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

அதன்படி **கண்டக்குழி கருவாடு உற்பத்தி கிராமம், நாச்சிக்கள்ளி உப்பு உற்பத்தி கிராமம், தலவில் இனிப்பு பண்டங்கள் உற்பத்தி கிராமம், தலுவ நிர்மல்புர மலர் உற்பத்தி கிராமம்.** என நான்கு கிராமங்கள் தெரிவு செய்யப்பட்டு சௌபாக்கியா உற்பத்தி கிராமங்களின் வேலைத்திட்டங்கள் கற்பிட்டியில் இடம்பெற்று வருகின்றது.

சுபீட்சத்தின் நோக்கில் மக்களை மையமாகக் கொண்ட பொருளாதாரத்தை கட்டியெழுப்பும் நோக்கில் இந்த உற்பத்தி கிராமங்களின் எண்ணக்கரு செயற்படுத்தப்படுகிறது.

கண்டக்குழி கருவாடு உற்பத்தி கிராம அபிவிருத்தி வேலைத்திட்டத்திற்கு 55 இலட்சம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளதுடன் இதன் மூலம் முதற்கட்டமாக 20 மீனவப்பெண்கள் பயனடைய உள்ளனர்.

நாச்சிக்கள்ளி உப்பு உற்பத்தி கிராம அபிவிருத்தி வேலைத்திட்டத்திற்கு 20 இலட்சம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளதுடன் இதன் மூலம் 171 கிராமவாசிகள் பயனடைய உள்ளனர்.

தலவில் இனிப்பு பண்டங்கள் உற்பத்தி கிராம அபிவிருத்தி வேலைத்திட்டத்திற்கு 20 இலட்சம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளதுடன் இதன் மூலம் 20 கிராமவாசிகள் பயனடைய உள்ளனர்.

தலுவ நிர்மல்புர மலர் உற்பத்தி கிராம அபிவிருத்தி வேலைத்திட்டத்திற்கு 20 இலட்சம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளதுடன் இதன் மூலம் 30 கிராமவாசிகள் பயனடைய உள்ளனர்.

இந்நிகழ்வில் புத்தளம் மாவட்ட செயலாளர் கே.பி விஜேசிரி, பாராளுமன்ற உறுப்பினர்களான சிந்தக மாயாதுன்ன, அலிசப்ரி கற்பிட்டி பிரதேச செயலாளர் டீ.பி தனன் சூரிய, புத்தளம் மாவட்ட திட்டப் பணிப்பாளர் எஸ்.பி சனநாயக்க ஆகியோர் கலந்து கொண்டனர்.





SHAHEETHAMA'S
இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட புத்தம் புதிய ஆடைகளுக்கு நாடுங்கள்
M.A.M. Arfak
Proprietor
சஹீதாமாஸ் டெக்ஸ்
Exclusive Dealers in Textiles & Shoe Palace
MAIN STREET, KALPITIYA. TEL : 0728618783

Yoosuf fruits & sweets
பல வருட அனுபவத்துடன்
புதிய பரிணாமத்தில்
புத்தம் புதிய பழ வகைகளுக்கு
Yoosuf fruits & sweets
Main Street, Kalpitiya
Tel : 0719227788 / 0758936979

உங்கள் ஆலோசனைகள், கருத்துக்கள், விமர்சனங்கள், படைப்புக்கள், ஆக்கங்கள், எழுத்துக்கள், உங்கள் கிராம செய்திகள் எதுவானாலும் தரமானவைகளுக்கு களம் அமைத்து தர நாம் தயார் ஆக்கம் எழுத்துருவிலோ.. அல்லது குரல் பதிவாகவோ.. இருக்கலாம் உடன் எமது வட்சப் இலக்கத்திற்கு அனுப்பி வைக்கவும்.
0774748407


இவ் கருப்புவெள்ளை மின்னிதழ் கற்பிட்டியைச் சேர்ந்த எம்.எச்.எம்.சியாஜ் என்பவரால் 2021.07.30 ல் வெளியீடப்பட்டது.